# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 05.II.2024 supeedsam.com supeedsam@gmail.com




# தெற்கில் மேற்கொள்ளும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கையினை வட, கிழக்கில் ஏன் முன்னெடுக்கவில்லை

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

பருத்தித்துறை பேருந்து நிலையதில், (04 ) தேர்தல் துண்டுப்பிரசுர விநியோகம். சசிகலா இரவிராஜ்க்கு ஆதரவு தெரிவித்து இத்துண்டுப்பிரசுர விநியோகம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சுரேன் குருசுவாமி, மு.சிவாஜிலிங்கம், சசிகலா இரவிராஜ் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

சிவாஜிலிங்கம் துண்டுப்பிரசுர விநியோகிக்கும் இடத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், தெற்கில் மேற்கொள்ளப்படும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கையினை வடக்கு கிழக்கில் ஏன் முன்னெடுக்கவில்லை. வடக்கில் கடந்த ஆட்சியின் போது அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் அங்கயன் இராமநாதன் ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

# சுமந்திரனுக்கு எதிராக சால்ஸ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு!

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உண்மைக்கு புறம்பாக தனக்கு எதிராக அவதூறு பரப்பும் வகையில் கருத்துக்களை யாழ்பாணத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் வெளியிட்டமை தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சால்ஸ்நிர்மலதான் மன்னார் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக இடம் பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்

மன்னார் தமிழரசு கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

தான் மதுபான சாலைக்கு சிபாரிசு கடிதம் வழங்கியதாகவும் அதை

02 ஆம் பக்கத்தில்...




# கருணா – பிள்ளையான் தரப்பிடையே சுவரொட்டியால் வெடித்த மோதல்

மட்டக்களப்பில் விநாயகமூர்த்தி முரளிதரனின் கட்சி வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்கள் மீது சிவனேசத்துரை சந்திரகாந்தன் கட்சி ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 3 பேர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஜெயந்திபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில்,

02 ஆம் பக்கத்தில்...




# விசாரணைகளுக்கு தயாராகும் மகிந்த



அரசாங்கம் தமக்கான பாதுகாப்பை குறைத்தாலும், மக்கள் தன்னை பாதுகாத்துக் கொள்வார்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அண்மையில் மகிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை தொடர்பில், ஊடகவியலாளர் ஒருவரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது இதனை தெரிவித்துள்ளார்.

தனது பாதுகாப்பில் தான் அதிக கவனம் செலுத்துவதில்லை. அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து தான் அதிருப்தி அடையவில்லை என்றும் மகிந்த தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் தனது குடும்பத்தினருக்கு

02 ஆம் பக்கத்தில்...






# ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது!





ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் சுரேந்திரனினால் அக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் மாற்றத்தை எதிர்நோக்கி இருக்கும் நிலையில் நிச்சயமாக அந்த மாற்றம் நிகழும் என்றும் கிளிநொச்சி மக்களின் அடிப்படைத் தேவைகள் , நீண்ட கால இழப்புக்கள் என எம் மக்களின் அத்தனை துயரத்திற்குமான மாற்றமாகவே எதிர்வரும் பொதுத் தேர்தல் அமையும் என்றும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

## கருணா - பிள்ளையான் தரப்பிடையே சுவரொட்டியால் வெடித்த மோதல்

மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பாடசாலை வீதியில் ஜனநாயக முன்னணி கட்சியான கருணாஅம்மானின்கட்சியின்வேட்பாளரின் காரியாலயத்தின் முன்னாள் உள்ள வீதியில் ஆதரவாளர்களுடன் பேசிக் கொண்டிருந்துள்ளார்.

இந்த நிலையில் அந்த பகுதிக்கு வந்த 6 பேர் கொண்ட பிள்ளையான் கட்சி ஆதரவாளர்கள் அங்குள்ள மதில்களில் ஒட்டப்பட்டிருந்த கருணா அம்மானின் கட்சி வேட்பாளர்களது சுவரொட்டிகளுக்கு மேல் பிள்ளையானின் கட்சி சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

இதன்போது கருணா தரப்பின் வேட்பாளர் சென்று எங்கள் சுவரொட்டிகளுக்கு மேல் சுவரொட்டிகளை ஒட்டவேண்டம் என தெரிவித்த நிலையில் இரு கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே வாய்தர்கம் ஏற்பட்டதையடுத்து பின்னர் கைகலப்பாகமாறியுள்ளது.

இதனையடுத்து கருணா தரப்பின் ஆதரவாளர் படுகாயமடைந்ததையடுத்து பிள்ளையான் கட்சி ஆதரவாளர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக கூறப்படுகிறது.

படுகாயமடைந்தவர்களை மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## விசாரணைகளுக்கு தயாராகும் மகிந்த

எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தினால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விசாரணைகளுக்கு ஆதரவளிப்பதாக மகிந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு வேறு வேலையில்லாமல் பல குற்றச்சாட்டு சுமத்தி விசாரணைகளை நடத்தி வருகின்றது. செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருந்தாலும் அதனை விட்டுவிட்டு இவற்றினை செய்கின்றது.

பழைய கோப்புகளை தூக்கிக் கொண்டு சுற்றுவதை விட்டுவிட்டு மக்களின் வாழ்க்கை சுமையை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுமந்திரனுக்கு எதிராக சால்ஸ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு!

நான் வெளிப்படையாக ஒப்புகொண்டதாகவும் உண்மைக்கு புறம்பான கருத்தை எனக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சுமந்திரன் அவர்கள் கூறியிருந்தார்.

இந்த கருத்தை அவர் கூறிய சமயம் நான் இந்தியாவில் இருந்தமையினால் இன்று நான் மன்னார் வந்தவுடன் உண்மைக்கு புறம்பான கருத்தை வெளியிட்டமை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ் நிலையத்தில் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளேன்.

புலம்பெயர் தமிழர்கள் பலர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பை மேற்கொள்வதற்கான உதவிகளை கோரிய போது அவர்களின் தேவைகளின் நிமித்தம் நான் அந்த சந்திப்புக்களை மேற்கொள்வதற்கான உதவிகளை செய்து கொடுத்தேன் அவ்வாறு சந்தித்தவர்களில் தனிப்பட்ட பழக்கத்தின் காரணமாக யாரும் அந்த வாய்ப்பை பயன்பத்தி மதுபான சாலைகளை அமைப்பதற்கான அனுமதியை பெற்றிருந்தால் நான் அதற்கு பொறுபாக முடியாது.

என்பதை நான் அன்மையில் ஒரு ஊடகவியளாலரின் கேள்விக்கு பதிலாக வழங்கியிருந்தேன் ஆனாலும் சுமந்திரன் அவர்கள் உண்மைக்கு புறம்பாக நான் எழுத்து மூல சிபாரிசு வழங்கியதாகவும் அதை ஒத்துக்கொண்டதாகவும் சொன்ன கருத்தை வன்மையாக கண்டிப்பதோடு பொலிஸார் குறித்த விடயத்தில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் ;

அதனால் தான் தனக்கு இம்முறை ஆசனம் வழங்கவில்லை என சுமந்திரன் குறிப்பிடுவதாகவும் அது முற்றிலும் பொய் எனவும் 2020 ஆண்டில் இருந்தே கட்சியில் செயற்பாடுகளில் இருந்த அதிருப்திகாரணமாக உளவியல் ரீதியாக கட்சியோடு பயணிப்பதா இல்லையா என்ற மனநிலை இருந்து வந்ததாகவும் அதே நேரம் எனது சுயவிருப்பத்தினாலும் உடல் நல பிரச்சினைகளாலும் இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதாலும் நானாக மேற்கொண்ட முடிவே அது என அவர் சுட்டிகாட்டினார்

குறிப்பாக சுமந்திரன் 2020 ஆண்டுக்கு பிறகு விடுதலைபுலிகளுக்கு எதிரான கருத்துக்களை தொடர்ந்து தெரிவித்து வந்த நிலையில் அவருக்கு எதிராக தான் சம்மந்தன் அவர்களுக்கு கடிதம் எழுதியதாகவும் சுமந்திரன் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு இவ்வாறான கருத்துக்களை தெரிவிப்பதை ஏற்க்கொள்ள முடியாது எனவும் அவருக்கு எக்காரணம் கொண்டும் கட்சியின் பதவி நிலைகள் வழங்க கூடாது எனவும் எழுத்து மூலமாக சம்மந்தன் ஐயாவுக்கு எழுதியிருதேன்

அத்துடன் கடந்த 2020 ஆண்டு தேர்தலின் போது சுமந்திரன் வன்னியில் ஏறும் எந்த அரசியல் மேடைக்கும் நான் ஏறமாட்டேன் என தெரிவித்திருந்தேன் அதே போன்று எந்த அரசியல் மேடையிலும் ஏறவில்லை அதன் காரணம் என்ன என்றால் சுமந்திரன் பிரச்சாரம் செய்து அதில் ஒரு வாக்கு விழுந்து நான் வெற்றி பெற கூடாது என்பதற்காகவே

அவ்வாறான நிலையில் அவர் எனக்கு எதிராக பல வேலைகள் செய்திருந்தார் இருந்தாலும் வன்னி தேர்தல் தொகுதியில் தமிழரசு கட்சி சார்பாக அதிக வாக்குகளை பெற்று நான் வெற்றி பெற்றேன்

அதே நேரம் அண்மையில் கட்சியின் தலைமைத்துவம் சம்மந்தப்பட்ட விடயத்தில் சுமந்திரன் தலைவராக வந்துவிட கூடாது என்பதற்காக நான் நேரடியாகவே சிறிதரனுக்கு ஆதரவாக செயற்பட்டதுடன் சுமந்திரன் தலைவராக வரமுடியாமைக்கு நான் பெறும் பங்காற்றியிருந்தேன் அதுவும் அவருக்கு நன்றாக தெரியும் இப்பிடியாக கட்சியில் இருந்த அதிருப்தியான நிலமைகாரணமாகவே இளைஞர்களுக்கு வாய்பு வழங்கு தேர்தலில் போட்டியிடவேண்டாம் என தீர்மானித்திருந்தேன். சுமந்திரனுடன் 2020 ஆண்டில் இருந்தே முரண்பாடுகளோடுதான் பயணித்தேன் இவ்வாறு இருக்க இந்த தேர்தலில் சுமந்திரனுக்கு அடிமையாக தேர்தல் கேட்க முடியாது

என்னை பொறுத்த வரையில் வன்னி மாவட்டம் திருகோணமலை மாவட்டம் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் பாதுகாக்கபடவேண்டும் ஏன் என்றால் இந்த பகுதிகளில் சிங்கள முஸ்லீம் அரசியல் வாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது

ஆனாலும் சுமந்திரனின் இவ்வாறான தொடர்சியான செயற்பாடுகளால் கட்சி அங்கத்தவர்களும் மக்களும் புலம்பெயர் அமைப்புக்களும் மன விரக்தியில் இருக்கிறார்கள் என்பதை பதிவு செய்கின்றேன்

அதே நேரம் சுமந்திரனுக்கும் அவர் சார்ந்தவர்களுக்கும் ஒன்றை தெரிவித்து கொள்கின்றேன் நான் எந்த ஒரு மதுபான சாலைக்கும் அனுமதி பெறவும் இல்லை யாருக்கும் சிபாரிசும் செய்யவில்லை எனக்கு அறிமுகமானவர்கள் அதை பெற்றிறுந்தால் அது அவர்களின் தனிப்பட்ட விடயம் அதற்கு நான் எந்த சிபாரிசு கடிதம் கொடுக்கவில்லை என்பதை தெரிவிப்பதுடன் அவருடைய கருத்து தொடர்பில் நான் மன்னார் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்

அதே நேரம் தேர்தல் நியமனத்திற்காக நான் தேர்தல் கேட்பதாக விண்ணப்பிக்கவில்லை அதே நேரம் தற்போது இருக்கும் தமிழரசு கட்சி நிர்வாகத்தோடு பயணிக்க முடியாது என்பதுடன் சுமந்திரன் சொல்லும் எல்லாவற்றுக்கும் தலையாட்டி கொண்டு இருக்க முடியாது என்பதால் தேர்தலில் இருந்து நானாக தான் விலகினேன்

சுமந்திரன் தலைவராவதில் ஏற்பட்ட பிரச்சினை மற்றும் பல்வேறு வன்மத்தை மனதில் வைத்தே முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் அவர் சார்ந்தவர்களும் தொடர்ந்து சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் அதே நேரம் சுமந்திரனுக்கு நான் பகிரங்க சவால் விடுக்கின்றேன் நான் வழங்கிய சிபாரிசு கடிதத்தை அவர் கொண்டு வந்தால் நான் அவர் சொல்வதை செய்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

## தெற்கில் மேற்கொள்ளும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கையினை ....

தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைகளுக்கு அனுமதி கொடுத்து ஊழலில் ஈடுபட்டுள்ளார். இதற்கு நடவடிக்கை இல்லையா?

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், மக்களிடம் இருந்து சசிகலா இரவிராஜ்க்கு அமோக ஆதரவு கிடைத்து வருகின்றது.

பாராளுமன்ற பொதுத்தேர்தல் பிரச்சாரத்திற்காக துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பவர்களை மேற்பார்வை செய்வதற்காக சசிகலா இரவிராஜ் மற்றும் மு.சிவாஜிலிங்கம் வருகை தந்திருந்தார்கள்

சசிகலாவிற்கு ஆதரவாகப் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட மு.சிவாஜிலிங்கம், ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்...

இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு சரவதேச விசாரணையே தேவை.

தற்போது உள்ள அரசியல் நிலை பற்றி நமக்கு நன்கு பரீட்சியமானது. இது ஒரு சங்கீதக் கதிரை போன்றது. 75 ஆண்டுகளாக நாங்கள் நன்கு அறிந்த அரசியல் தான் இது. தென் இலங்கை சிங்களக் கட்சிகளின் மன நிலை நாம் அறிந்தது.

எமது தமிழ் பிரதிநிதித்துவத்தை நாம் ஒற்றுமையாகச் செயற்பட்டு நிலைநாட்ட வேண்டும். சங்குச் சின்னத்தை அமோக வெற்றி பெறச் செய்ய வேணட்டும். சசிகலா பாராளுமன்றம் செல்ல வேண்டும். சசிகலாவை வெற்றி பெறச் செய்து பாராளுமன்றம் அனுப்ப மக்கள் அவருக்கு வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்யவேண்டும்.

# மட்டக்களப்பில் சத்திர சிகிச்சை பிரிவு அங்குரார்ப்பணம்









(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவி ஊடாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் நிர்மாணிக்கப்பட்ட சத்திர சிகிச்சை பிரிவு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கலாரஞ்ஜனி கணேசலிங்கம் அவர்களின் ஏற்பாட்டில் இடம் பெற்ற அங்குரார்ப்பண நிகழ்விற்கு பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவர்கள் கலந்து சிறப்பித்த நிகழ்விற்கு விசேட விருந்தினர்களாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி பாலித்த குணரத்ன மகிபால, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்டினா முரளிதரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். சுமார் 320 மில்லயன் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதியில் 4 சத்திர சிகிட்சைக் கூ ங்கள் காணப்படுவதுடன் அவற்றை இலங்கைக் கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் அவரது பாரியார் உள்ளிட்ட சிறப்பு அதிதிகள் பார்வையிட்டதுடன், வைத்திய சாலை நிருவாகத்தினரால் உயர்ஸ்தானிகர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், மோப்ப நாய்கள் மூலம் வைத்தியசாலை வளாகம் பரிசோதிக்கப்பட்டதுடன், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தபால் மூல வாக்களிப்பு அமைதியான முறையில்





(ஹஸ்பர் ஏ.எச்)

இம்முறை இடம் பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு (04) தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் கண்காணிப்பின் கீழ் இடம் பெற்ற குறித்த தபால் மூல வாக்களிப்பானது அமைதியான முறையில் இடம் பெற்றது. இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 116 உத்தியோகத்தர்களும் சமூக நீர்வழங்கல் சபையின் 05 உத்தியோகத்தர்களும்,கால்நடை திணைக்களத்தின் 02 உத்தியோகத்தர்கள் என மொத்தமாக 123 வாக்காளர்கள் தபால் மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்றிருந்தனர்.

சுமூகமான முறையில் இடம் பெற்ற தபால் வாக்களிப்பின் போது அதனை கண்காணிக்க பெப்ரல் அமைப்பு மற்றும் அரச கண்காணிப்பினரும் களத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குருநாகல் மாவட்ட பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்களுக்கு செயலமர்வு






(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் அவர்களின் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலின் கீழ் குருநாகல் மாவட்டத்தில் பரகஹதெனிய ஜாமிஉல் அன்வர் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் அப்பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்களின் ஒத்துழைப்பில் (03) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இச்செயலமர்வில் சுமார் 200 பள்ளிவாசல்களின் 600 க்கும் மேற்பட்ட நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இந்த கருத்தரங்கில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள், பள்ளிவாசல் எவ்வாறு ஒரு சமூக மையமாக செயற்படுவது, இலங்கை வக்பு சபை, இலங்கை வக்பு நியாய சபை மற்றும் முஸ்லிம் தரும நம்பிக்கை பொறுப்புகள் (Trust) ஆகியன தொடர்பில் அறிமுகம், குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டமும் எதிர்கால செயற்பாடுகளும், குர்ஆன் மத்ரஸா அறிமுகமும் அதன் முக்கியத்துவம் ஆகியன தொடர்பில் நம்பிக்கையாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டன.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அறிமுகமும் அதன் சேவைகள் தொடர்பான தொடக்க உரையை திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் நடாத்தினார்.


இக் கருத்தரங்கில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சார்பாக வளவாளர்களாக அதன் உதவிப் பணிப்பாளர்களான எம்.எஸ். அலா அஹ்மத், என். நிலோபர், வக்பு பிரிவின் அதிகாரி அஷ்ஷேக் எம்.ஐ. முனீர், வக்பு நியாய சபை பதில் செயலாளர் எம்.என்.எம். ரோஸன், குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பொறுப்பதிகாரி அஷ்ஷேக் ஏ.எம்.ரிஸ்மி ஆகியோர் கலந்து கொண்டு தெளிவுரைகளை வழங்கினர்.


இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக மாவத்தகம பிரதேச செயலாளர் எம்.எஸ். ஜானக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இக் கருத்தரங்கை குருநாகல் மாவட்ட முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களான அஷ்ஷேக் ரீ.இஹ்ஸான் மரிக்கார், அஷ்ஷேக் எம்.எம். ஐயூப், எம்.என்.எம். சாஜித், திருமதி எம்.எச்.ஐ சப்மா மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதான காரியாலய வக்பு உத்தியோகத்தர் எம்.ஐ.எம். மிஸார் ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இச் செயலமர்வை எதிர்வரும் காலங்களில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் நடாத்த முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தீர்மானித்து அதற்கான முன்னெடுப்புகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கந்தபுராண அமிர்தம் நூல் வெளியீட்டு விழா



( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய முன்னாள் வண்ணக்கரும், பிரபல புராண பயனிகருமான கலாபூஷணம் தம்பிமுத்து மகேந்திரா எழுதிய 'கந்தபுராண அமிர்தம்' என்ற நூல் வெளியீட்டு விழா திருக்கோவில் ஆலயத்தில் (2) சனிக்கிழமை நடைபெற்றது.

முதலில், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் மற்றும் ஆலய குரு சிவ ஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் ஆகியோர் பொன்னாடை போர்த்தப்பட்டு எழுத்தாளர் மகேந்திராவால் முதல் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பின்னர், ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் மற்றும் வண்ணக்கர் வன்னியசிங்கம் ஜயந்தன் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன. தொடர்ந்து, முன்னாள் திருக்கோவில் தவிசாளர் இ.வி.கமலராஜன், பிரபல ஊடகவியலாளர் வி.ரி. சகாதேவராஜா ,ஆலயசந்தானத்து பிரதிநிதி க. பார்த்திபன்( பிரான்ஸ் )உள்ளிட்ட பல பிரமுகர்களுக்கு முதல் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஆலயம் சார்பில் எழுத்தாளர் மகேந்திராவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

எழுத்தாளர் மகேந்திராவின் பேத்தியான தாதிய உத்தியோகத்தர் திருமதி கௌசிகா சியாம்சுந்தர் இந்த நூலை தனது பாட்டனாருக்காக அச்சிட்டு வெளியிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

விழாவில் அவரும் பாட்டனாருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் நிகழ்வை நெறிப்படுத்தி நன்றியுரையையும் வழங்கினார். விழாவில் ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் சிறப்புரையாற்ற,நூலாசிரியர் கலாபூஷணம் தம்பிமுத்து மகேந்திரா ஏற்புரை வழங்கினார்.

குடும்ப உறவுகள் மற்றும் பக்தர்களுக்கும் இந்த நூல் இலவசமாக வழங்கி வைக்கப் பட்டன.

# பணத்திற்கு சோரம் போனால் பிணத்தையும் பாதுகாக்க முடியாது !

## குடிநிலத்தில் தமிழரசு வேட்பாளர் ஜெயசிறில் எச்சரிக்கை





**( வி.ரி.சகாதேவராஜா)**

இன்று மின்சாரம் தாக்கி மரணித்த இளைஞனை திருக்கோவில் ஆதரவைத்தியசாலை பிரேத அறையில் வைப்பதற்கு குளிரூட்டி இல்லை. இன்னும் இன்னும் பணத்திற்கு தமிழ் மக்கள் சோரம் போனால் இவ்வாறான அவலங்கள் தொடரும் . பிணத்தைக் கூட பாதுகாக்க முடியாத அவலநிலை தோன்றும்.

இவ்வாறு ,இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரும் ,காரைதீவு முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் நேற்று திருக்கோவில் பிரதேச குடிநில மக்களுடன் உரையாடுகையில் தெரிவித்தார் .

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் ..

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான தமிழ் பிரதேச வைத்தியசாலைகள் மிகவும் அவலமான நிலையில் இருக்கின்றன. அரச மாற்றின அரச பயங்கரவாதத்தின் விளைவே இது.பொத்துவில் தொடக்கம் தம்பட்டை வரையிலான பெருநிலப்பரப்புக்குரிய ஒரே ஒரு சுகாதார சேவை வழங்கும் வைத்தியசாலையாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலை திகழ்கிறது . 25 டாக்டர்கள் இருக்க வேண்டிய வைத்தியசாலையில் இன்று ஆக 6 டாக்டர்கள் கடமை ஆற்றுகிறார்கள். பிரேத அறைக்கு குளிரூட்டி இல்லை. இடையிடையே அன்புலன்ஸ் பழுது.

இவ்வாறு பல குறைபாடுகள் இருக்கின்றன. இந்த ஏழை மக்களுக்கு சுகாதாரசேவை செய்ய வேண்டிய வைத்தியசாலையின் அவலத்தை பாருங்கள். முன்பிருந்தவர்களும் சரி இன்றும் சரி அதனை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நான் பாராளுமன்ற உறுப்பினரானால் முதலில் இந்த வைத்தியசாலையை நிச்சயம் கவனிப்பேன்.

தேர்தல் வந்தால் பணத்தின் பின்னால் அலையும் கொள்கை இல்லாதவர் நம் மத்தியில் இருக்கிறார்கள். அவர்கள் சொந்த ஊரையே காட்டிக் கொடுப்பார்கள்.

தமிழன் தமிழரசு கட்சியின் பக்கம் சாயாமல் வேறு கட்சியின் பக்கம் எதற்காக சாய்கிறான் என்ற உண்மை இந்த பணம் தான்.

இதனை மக்கள் அறிந்தும் அறியாமல் இருக்கின்றீர்களா என்னவென்பது உண்மைக்கு புறம்பாகவே உள்ளது.

நான் நினைக்கின்றேன் தமிழரசு கட்சியின் பக்கம் சாய்ந்தால் பணம் கிடைக்காது. அதன் அடிப்படையில் மாற்றுக் கட்சியின் பக்கம் சாய்ந்தால் நிறைய பணம் கிடைக்கும் என்பதற்காக .

மக்களை ஏமாற்றும் கூட்டம் ஏமாற்றிக் கொண்டுதான் இருக்கின்றது .நீங்கள் உதாரணமாக சிந்தித்துப் பாருங்கள் நடந்து முடிந்த அனைத்து தேர்தல்களிலும் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு கட்சியின் பின்னால் முக்கியமான பெரும் தலைகள் கூட்டம் கூட்டமாக மக்களின் மண்டையை கழுவி ஏமாற்றுகிறார்கள். பொக்கட்டை நிரப்புகிறார்கள்.

அந்த வகையில் தமிழரசுகட்சி எந்த பணத்திற்காகவும் எவர்பக்கமும் சாயவில்லை .தமிழ் இனத்தின் விடிவுக்காக கொள்கை மாறாமல் திடமாக நிற்கின்றார்கள். உண்மையில் தமிழ் மக்களாகிய நாங்கள் எப்பயாவது ஒரு கணம் ஆலோசித்து பார்த்ததுண்டா?

தேர்தல் முடிந்தால் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியையும் முடிந்துவிட்டது. பாமர மக்களை ஏமாற்றும் மாற்றுக் கட்சிக்கு துணை போகும் ஆதரவாளர்கள் பணத் தொகையை பெற்றுக்கொண்டு காலாகாலம் தொட்டு ஏமாற்றி வருகின்றார்கள். இதில் பல குற்றச்சாட்டுகள் தமிழரசு கட்சியின் மீது வைக்கின்றார்கள்.

செய்த தவறுகள் அனைத்தும் அவர்களே.. தமிழரசு கட்சியானது ஒரு நோக்கத்தோடு இம்முறை களம் இறங்கி இருக்கின்றது. குறிப்பாக எமது மக்களின் அபிவிருத்தி காலம் கடந்த போதிலும் அபிவிருத்தியை காணாத மக்கள் எதிர் வருகின்ற 15-ம் திகதிக்கு பிற்பாடு இதுவரை காலமும் நடக்காத அபிவிருத்தியை தமிழரசு கட்சியின் ஊடாக மக்கள் பயன்பெறுவார்கள். இது மறுக்க முடியாத உண்மை. காத்திருப்போம். தமிழரசு கட்சியின் வெற்றியை நோக்கி.. என்றார்.

# கிழக்கில் பல்துறை சார் மானிய உதவிகளுக்கு 2.35 பில்லியன் நிதி!

## இந்திய உயரிஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு!








**அபு அலா**

கிழக்கு மாகாணத்தின் பல்துறை சார் மானிய உதவிகளுக்கு 2.35 பில்லியன் இலங்கை ரூபாய்களை ஒதுக்க இந்தியா உறுதியளித்துள்ளதாக இந்திய உயரிஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

திருகோணமலை திருக்கடலூர் ஆழ்கடல் மீனவர்கள் வர்த்தக சங்க கட்டிடத்தில் (03) மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அதன் தலைவர் ரவிகுமார் தலைமையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இலங்கைக்கு இந்தியா வழங்கிய பெரிய அபிவிருத்தி ஒத்துழைப்பு உதவிகளின் வரிசையில், இந்த நாட்டின் மீனவ சமூகத்தை ஆதரிப்பதும், ஊக்குவிப்பதும், அவர்களின் தொழிலை மேம்படுத்துவதற்கான முயற்சியை வழங்கி வைப்பதற்கும் எங்கள் நாடு முக்கிய இடத்தில் உள்ளது.

2009-10 ஆம் ஆண்டு உள்நாட்டு ஆயுத மோதலை அடுத்து, உள்நாட்டில் இடம்பெயர்ந்த மீனவர்கள் உள்ளிட்ட மீனவ குடும்பங்களுக்கு கடந்த காலங்களில் மீன்பிடி உபகரணங்களை வழங்கிய பல நிகழ்வுகளும் இருப்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிழக்கு மாகாணத்தின் பல்துறை சார் மானிய உதவிகளுக்கென, சுமார் 2.35 பில்லியன் இலங்கை ரூபாய்களை ஒதுக்க இந்தியா உறுதியளித்துள்ளது. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு 33 திட்டங்களுக்கான, கட்டமைப்புத் திட்டங்கள் உறுதி செய்யப்படஉள்ளன. இவற்றில், 7 மீன்பிடித் திட்டங்களை கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் மேற்கொண்டு அவர்களுக்காக மீன்பிடி உபகரணங்களை வழங்குவது மட்டுமல்லாமல், நன்னீர் அலங்கார மீன் வளர்ப்பு, கடற்பாசி கூண்டு வளர்ப்பு, திலாப்பியா குளத்து மீன் வளர்ப்பு மற்றும் பருவகால தொட்டி மேம்பாடு போன்றவை உள்ளடங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். கடின உழைப்பாளிகளான திருகோணமலை மீனவர்களுக்கு, படகுகளுக்கான வெளியிணைப்பு இயந்திரம், பிடித்த மீன்களை பாதுகாக்க கூடிய உறைவிக்கும் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் உயிர்காப்பு அங்கிகளை இன்று வழங்கியுள்ளேன். இவை உங்கள் அன்றாட நடவடிக்கைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் போன்றவற்றை மேம்படுத்த உதவ அத்தியாவசியமான கருவிகளாகும்.

நீங்கள் பிடித்த மீன்களை தரம் கெடாது பேணுவதற்காக ஆழமான உறைவிப்பான்களை பயன்படுத்தி பாதுகாப்பாக வைத்துக்கொண்டு அதை உறுதி செய்யும் அதேவேளையில், உங்கள் வருமானத்தைப் பெருக்குவதற்கும் பங்களிக்கும் என நான் நம்புகிறேன். கடலில் சிக்கித்தவிக்கும் அல்லது விபத்துகளை சந்திக்கும் மீனவர்களையும் மற்றும் அவர்களது படகுகளை பாதுகாப்பாக மீட்பதற்கு அதிக வலு கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் உயிர்காப்பு அங்கிகள் மிக முக்கிய பங்கினை வகிக்கும்.

இந்தியாவும் இலங்கையும் நமது கரையோரங்களை இணைக்கும் வரலாறு, கலாச்சாரம் மற்றும் இந்தியப் பெருங்கடலில் வேரூன்றிய ஆழமான பிணைப்பைப் பகிர்ந்து கொள்கின்றன. கடந்த வாரம், இந்தியா - இலங்கை மீன்வளத்துறையின் கூட்டுப் பணிக்குழுவின் 6வது கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. அதில் இரு தரப்பினரும் மீனவர்கள் தொடர்பான அனைத்து பிரச்சினைகளையும் விரிவாக ஆய்வு செய்தனர்.

இலங்கையில் மீன்பிடித் தொழிலின் முக்கியத்துவத்தையும், மீனவர்களாகிய நீங்கள், இயற்கையாலும், சந்தைப்படுத்துவதில் உள்ள விடயங்களாலும், நவீன உபகரணங்களை அணுகுவதன் மூலமும் எதிர்கொள்ளும் சவால்களையும் இந்தியாவில் உள்ள நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

இந்த நட்புறவு மற்றும் கூட்டாண்மையின் உணர்வில்தான் இந்தியா இலங்கைக்குத் தேவையான நேரங்களில் தொடர்ந்து துணை நின்றது. இனியும் நிற்கும். இன்றைய உதவி அந்த திசையில் பயணிப்பதற்கான மற்றொரு படியாகும்.

இந்த முயற்சி பொருளுதவி வழங்குவது மட்டுமல்ல; திருகோணமலை மீனவ சமூகத்தின் நிலையான எதிர்கால சமூகங்களை வலுப்படுத்துவதும், அதற்கான முதலீடுகளை செய்வது மாகும். வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும் எங்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்புக்கு இது ஒரு சான்றாகும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவத்தையும் உறவையும் தொடர்ந்து வலுப்படுத்துவோம். நமது பகிரப்பட்ட எதிர்காலம் செழிப்பு, அமைதி மற்றும் முன்னேற்றம் கொண்டதாக இருப்பதை உறுதிசெய்ய எமது அரசாங்கங்கள், எமது மக்கள் மற்றும் எமது சமூகங்கள் தொடர்ந்து இணைந்து செயல்படும்.

மேலும் இந்த உதவி உங்கள் வரும்...வில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். நீங்கள் இந்த பிராந்தியத்தின் முதுகெலும்பு. உங்கள் வெற்றி ஒட்டுமொத்த சமூகத்திற்கும் கிடைத்த வெற்றியாகும். உங்கள் வலைகள் எப்போதும் நிரம்பியிருக்கவும், கடலுக்கு செல்லும் எமது மீனவ உறவுகள் அனைவரும் பாதுகாப்பாக கரைக்குத் திரும்பவும் வேண்டி இறைவனை பிரார்த்திக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.



# அமைச்சுப்பதவிகளுக்காக தமிழரசுக்கட்சியை தந்தை செல்வா உருவாக்கவில்லை!

## அமைச்சு பதவிக்காக எனில் தமிழரசுகட்சிக்கு எவரும் வாக்களித்தேவையில்லை!!

### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியம் காட்டம்

( வி.ரி.சகாதேவராஜா)

அமைச்சுப்பதவிகளுக்காக தமிழரசுக்கட்சியை தந்தை செல்வா உருவாக்கவில்லை!

அமைச்சு பதவிகளுக்காக தமிழர்விடுதலை கூட்டணி உருவாகவில்லை,

அமைச்சு பதவிகளுக்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பை தலைவர் ஆரம்பிக்கவில்லை. எனவே அமைச்சு பதவிக்காக தமிழரசுகட்சிக்கு எவரும் வாக்களித்தேவையில்லை!!

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அமைச்சு பதவியையிட்டு பரிசீலிக்கலாம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியிருப்பது குறித்து கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்..

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 2001, தொடக்கம் 2015 வரை அனைத்து பாராளுமன்ற தேர்தல்களில் 15, 22,15,16 என ஆசனங்கள் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு கிடைத்தது தமிழ் தேசியம் உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் 2015, ல் நல்லாட்சி அரசில் 16, ஆசனங்கள் கிடைத்து எதிர்கட்சி தலைவர் பதவியும் எமக்கு கிடைத்து.

அதில் இணக்கப்பாடு அரசியல், அபிவிருத்தி அரசியல் என்று வடகிழக்கில் எட்டு நிர்வாக மாவட்டங்களிலும் அபிவிருத்தி குழு தலைவர் பதவிகள் கிடைத்தும் பாரிய அபிவிருத்திகள் வேலைவாய்ப்புகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்எடுத்தும் என்ன நடந்தது..?



அதன் பிரதிபலிப்பு 2020, பொதுத் தேர்தலில் 16, ஆசனங்கள் 10, ஆக குறைந்தது, அதற்கான மூலகாரணம் அரசுடன் சோரம் போனதால்தான் என்பது எத்தனை பேருக்கு தெரியும்.? சும்மா கிடந்த கஜேந்திரகுமார் சைக்கிள் கட்சிக்கு இரண்டு ஆசனமும், விக்கினேஷ்வரனுக்கு ஒரு ஆசனமும் 2020, ல் யாழ்மாவட்ட தமிழ்தேசிய கொள்கையுள்ளவர் வாக்களித்து எமது ஆதரவை குறைத்தனர் அல்லவா..?

அமைச்சு பதவிக்காக, சலுகை அரசியலுக்காக, பதவிக்காக எனில் தமிழரசுகட்சிக்கு எவரும் வாக்களித் தேவையில்லை,

அனுரவின் திசைகாட்டிக்கும், பிள்ளையானின் படகுக்கும், மோகனின் மாட்டுக்கும், டக்லசின் வீணைக்கும், அங்கயனின் தபால் பெட்டிக்கும், உமாசந்திரபிரகாசின் ரெலிபோனுக்கும் இதர அரச கைக் கூலி கட்சிகளுக்கும் வாக்களிக்கலாம் .அந்த கட்சிகளுக்கும் எமது தமிழரசு கட்சிக்கு வாக்களிப்பதற்கும் என்ன வித்தியாசம்..?

சுமந்திரன் விரும்பியபடி கதைப்பதெல்லாம் மரக்கட்டைகளான சிலர் கேட்டு தலையாட்டலாம்.

ஆனால் மக்களுக்கு தெரியும்..!

தேர்தல் விஞ்ஞாபனம் இதுவரை வெளியிடவில்லை, அஞ்சல் மூல வாக்களிப்புக்கு முன்னர் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட முடியாமல் நாம் உள்ளோம்.

சிலவேளை சுமந்திரன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அமைச்சுபதவி, அபிவிருத்திகளை பற்றி குறிப்பிட்டாலும் ஆச்சரியம் இல்லை.

மட்டக்களப்பில் தமிழரசுகட்சிக்கு இம்முறை கட்டாயம் மூன்று ஆசனங்கள் கிடைக்கும். சுமந்திரனின் இவ்வாறான கருத்துகளால்தான் பாதிப்பு ஏற்படும் .!

# அதிபர் குணராசாவின் மறைவு பெரிய நீலாவணை மக்களுக்கும் எமக்கும் பேரதிர்ச்சியையும் பெருந்துயரினையும் ஏற்படுத்தியுள்ளது

### கல்முனை அதிபர் சங்கச் செயலாளர் ஏ.ஜி.எம். றிசாத் அனுதாபம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பெரிய நீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயத்தின் அதிபர் அமரர் குணராசாவின் திடீர் மறைவானது அவரது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி, பெரிய நீலாவணை மக்களுக்கும் எமக்கும் பேரதிர்ச்சியையும் பெருந்துயரினையும் ஏற்படுத்தியுள்ளது எனக் கல்முனை அதிபர் சங்கச் செயலாளர் ஏ.ஜி.எம். றிசாத் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



அவரது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கையில், அமைதியாகவும் ஆரவாரமற்ற முறையிலும் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் அதிபர் குணராசா, ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றிய காலங்களில் கல்விச் சமூகத்துக்கு தன்னால் இயன்ற மகத்தான பல சேவைகளைச் செய்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

அத்தோடு தான் இறுதியாகக் கடமையாற்றிய பெரிய நீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயத்தைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து அந்த பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் இரவு, பகல் பாராது மிக அர்ப்பணிப்புடன் அரிய பல சேவைகளைச் செய்துள்ளார்.

தான் கடமையாற்றிய சகல பாடசாலைகளிலும் மாணவர்களின் கல்வி விடயத்தில் மட்டுமன்றி, அவரது ஒழுக்கம், பண்பாடு போன்ற விடயங்களிலும் அமரர் அதிபர் குணராசா அதிகம் கவனம் செலுத்தி வந்துள்ளார்.

அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் மனைவி, மக்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர், கல்வி வலயத்தில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் கல்முனை கல்வி வலய அதிபர்கள் சார்பாக அதிபர் சங்கச் செயலாளர் ஏ.ஜி.எம் றிசாத் தனது அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

# கிராமப்புற முஸ்லிம்களும் ஹஜ்ஜை நிறைவேற்றும் வகையில் திட்டம் வகுக்க அரசு கவனம் செலுத்தும்

### அமைச்சர் விஜித ஹேரத் நம்பிக்கை வெளியீடு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம் சமூகத்தின் ஐந்து கடமைகளில் ஹஜ் யாத்திரையும் ஒன்று. அந்தப் பொறுப்பை நிறைவேற்றும் போது, அந்த வாய்ப்புகள் சலுகை விலையில் மக்களுக்கு கிடைக்க வேண்டும். மேலும், கொழும்பிலும் கிராமப்புறங்களிலும் வாழும் முஸ்லிம் சமூகத்தினரும் புனித ஹஜ் யாத்திரை நடவடிக்கைகளில் பங்குபற்றும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டுமெனவும், இது தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்படும் எனவும்புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

அமைச்சர் விஜித ஹேரத்துக்கும் ஹஜ் யாத்திரையை ஏற்பாடு செய்யும் முகவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நேற்று (04) திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கும் போது,

ஹஜ் யாத்திரையை ஏற்பாடு செய்யும் நிறுவனங்களின் உரிமையாளர்கள் முன்வைக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்காலத்தில் ஹஜ் தொடர்பான நடவடிக்கைகளை மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேர்தல் காலத்தில் முஸ்லிம் சமூகத்தில் பரப்பப்படும் அவதூறுகள் குறித்தும் கருத்து தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சக்தி (மீகக) அரசாங்கத்தின் கீழ் அனைத்து மத நம்பிக்கைகளும் அனுமதிக்கப்படுவதாகவும், இதில் எந்த தடையும் இல்லை எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரோ அல்லது பின்னரோ இஸ்லாமிய திருமண விதிகளை மாற்றுவதில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை எனவும், சமூக வலைத்தளங்கள் ஊடாக உலாவரும் ஒவ்வொரு அமைப்பின் கருத்தும் ஐக்கிய மக்கள் சக்தி (மீகக) அரசாங்கத்தின் கருத்து அல்ல எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் சவூதி அரசினால் இலங்கைக்கு வருடாந்தம் வழங்கப்படும் ஹஜ் கோட்டா விநியோகம் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், 2004ஆம் ஆண்டு அமைச்சரவை அமைச்சராக இருந்த போது முஸ்லிம் பெண்களின் பாடசாலைச் சீருடைக்கு ஹிஜாப் தைக்கத் தேவையான துணியை ஒதுக்குவது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் தேவையான பணிகளைச் செய்திருந்தமையும் நினைவுகூரப்பட்டது.

இந்நிகழ்வில், மத கலாசார அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, புத்த சாசன. முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், இலங்கை ஹஜ் குழு தலைவர் இப்றாகீம் அன்சார் மற்றும் உறுப்பினர்கள், திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்கள், திணைக்கள அதிகாரிகள், அமைச்சின் அதிகாரிகள் எனப் பலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு எனது செலவில் நினைவுத் தூபி அமைக்கத் தயார்



(த.சுபேசன்)

உள்நாட்டு யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு எனது சொந்தச் செலவில் நினைவுத்தூபி அமைக்கத் தயார் என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்;

நீண்ட கால உள்நாட்டு யுத்தத்தால் நாட்டு மக்கள் பலரை இழந்து விட்டோம்.

இனங்களுக்கிடையே புரிந்துணர்வு இன்மை மற்றும் சமஉரிமை கிடைக்காமை உள்ளிட்ட காரணங்களால் உள்நாட்டு யுத்தம் உருவாகி அது பலரையும் காவு கொண்டு விட்டது.

இந்த யுத்தத்தால் தமிழ் மக்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் மௌனித்து 15வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தமிழ் மக்கள் யுத்த வடுவில் இருந்து மீள முடியாமல் உள்ளனர்.

அத்தோடு தமிழ் மக்களுக்கு உறவுகளை நினைவு கூர்வது கூட சவால் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் பொதுவான நினைவுத்தூபி ஒன்றை அமைத்து யுத்தத்தில் உயிரிழந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு அரசாங்கம் அனுமதி வழங்கும் பட்சத்தில் எனது சொந்தச் செலவில் பொதுவான நினைவுத் தூபியை நிறுவ நாட்டில் நல்லிணக்கத்தை மலரச் செய்வது சிறந்த ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்க முடியும்.என மேலும் தெரிவித்திருந்தார்.

**05,வது விகிதாசாரத்தேர்தல்**

# 2004

## மட்டக்களப்பு மாவட்டம்

✍பா.அரியநேத்திரன்

# அறிந்தவை அறியாதவை: வரலாற்று பகிர்வு

எனவே அந்த பாராளுமன்ற காலத்தில் 2004, தொடக்கம் 2010, வரை 27, பேர் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவிவகித்துள்ளனர். (விக்கினேஷ்வரன் பெயர் முன்மொழியப் பட்ட நிலையில் சுடப்பட்டார்) என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது அந்த 27,உறுப்பினர்களில்

ஜோசப்பரராசச்சிங்கம் ,ரவிராஜ், சிவநேசன், தங்கேஷ்வரி,துரைரெட்ணசிங்கம்,பத்மநாதன்,

ஈழவேந்தன், தோமஷ் , சம்பந்தன் ஆகிய ஒன்பதுபேர் எம் மத்தியில் இல்லை. ஏனைய 18, பேர் உயிருடன் உள்ளனர்!

2004, பொதுத்தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக அப்போது தெரிவு செய்யப்பட்ட 22, உறுப்பினர்கள் விபரம்:

**திருகோணமலை மாவட்டம்:**

1. இரா.சம்மந்தன், (அமரர் )
2. க. துரைரெட்ணசிங்கம்.(அமரர்)

**மட்டக்களப்பு மாவட்டம்:**

3. த.கனகசபை.
4. செல்வி. க. தங்கேஷ்வரி.(அமரர்)
5. சே.ஜெயானந்தமூர்த்தி. (தற்போது தமிழ் தேசியத்திற்கு எதிரான கட்சி)
6. பா.அரியநேத்திரன்.
7. ஜோசப்பரராசசிங்கம்.(தேசியபட்டியல் உறுப்பினர்-மாமனிதர்)

**அம்பாறைமாவட்டம்:**

8. க.பத்மநாதன்(அமரர்)

**யாழ்மாவட்டம்:**

9. மாவை. சேனாதிராசா.
10. ந. ரவிராஜ்(மாமனிதர்)
11. ச. சிவநேசன்(மாமனிதர்)
12. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.(கடந்த 2020,லும் பா.உ)
13. செ.கஜேந்திரன்.(கடந்த 2020,லும் பா.உ)
14. திருமதி. பத்மினி சிதம்பரநாதன்.
15. சுரேஷ் பிரமச்சந்திரன்.
16. எம்.கே.சிவாஜிலிங்கம்.
17. மா.க.ஈழவேந்தன்( தேசியபட்டியல் உறுப்பினர்-அமரர்)

**வன்னிமாவட்டம்:**

18. செல்வம் அடைக்கலநாதன்.(கடந்த 2020 லும் .பா.உ)
19. வினோ நோகராஜலிங்கம்(கடந்த 2020ம் பா.உ)
20. சிவசக்தி ஆனந்தன்.
21. சிவநாதன் கிசோர்.(தற்போது தமிழ்தேசியத்திற்கு எதிரான கட்சி)
22. க.கனகரெட்ணம். (தற்போது தமிழ்தேசியத்திற்கு எதிரான கட்சி)

இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் ஆறு வருட பாராளுமன்ற காலத்தில் ஒரே கட்சியை சேர்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒரு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட இருந்த ஒருவர் உட்பட மொத்தம் ஐந்து உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்ட வரலாறு தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு மட்டுமே இலங்கையில் ஏற்பட்டது. 2004,மே மாதம் முதல் வாரம் தமிழ்தேசிய கூட்டமைப்பு 22, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழவிடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், தமிழ்செல்வன், பொட்டமான், கரிகாலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட சந்திப்பின்போது மட்டக்களப்பு வெருகல் பகுதியில் கருணா குழுவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 2004, ஏப்ரல்,10, ம் திகதி உயிரிழந்த அனைத்து கருணா தரப்பு போராளிகளையும் மாவீரர் பட்டியலில் சேர்குமாறும், அவர்கள் விடுதலைக்காகவே போராடவந்தனர் அவர்களை தவறாக கருணா குழு பயன்படுத்தியது என்வும் எனவே அவர்களை மாவீரர் பட்டியலில் இணைத்து கொள்ளுமாறு பா.அரியநேத்திரன் தலைவர் பிரபாகரனிடம் முன்வைத்த வேண்டுகோளை தலைவர் ஏற்று கொண்டார். பின்னர் அனைவரையும் மாவீரர் பட்டியலில் சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.!

அடுத்த பதிவில் 06, வது விகிதாசாரத் தேர்தல் 2010, தொடர்பான விடயங்களை எதிர்பாருங்கள்..

தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார்.

6அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் 2009,மே,14, ல் இந்தியா (சென்னை)சென்றபோது அங்கு மாரடைப்பால் மரணமானார் அந்த இடத்திற்கு பட்டியலில் அடுத்த நிலையில் இருந்த பாண்டிருப்பு வைத்தியர் தோமஷ் தங்கத்துரை 2009, யூண் பாராளுமன்ற உறுப்பினரானார்.

2004, பொதுத்தேர்தலில் 22, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர் அதில் மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டனர், ஒருவர் விடுமுறையை சரியாக அறிவிப்பு செய்யாமையால் பதவி பறிபோனது, இன்னொருவர் சுகவீனத்தால் மரணமானார்.



# ஜனாதிபதிக்கு நாம் முழு ஆதரவு வழங்குவோம்



(க.கிஷாந்தன்)

'மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி கூறியுள்ளார். இது நல்ல விடயம். இதற்கு முன்னர் அவர்கள் கூறியதுபோல நாள் சம்பளமாக 2 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தால் அதற்கு நாம் முழு ஆதரவு வழங்குவோம்.'- என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற தேர்தல் வேட்பாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

நுவரெலியா, கந்தப்பளை பகுதியில் (04) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'எமது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாம் சம்பள உயர்வை பெற்றுக்கொடுத்தோம். அடிப்படை நாள் சம்பளமாக 1,350 ரூபா வழங்கப்பட்டது. எஞ்சிய 350 ரூபாவுக்கு கம்பனி தரப்பில் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன. ஆண்கள் 8 மணிநேரம் வேலை செய்ய வேண்டும், மேலதிக கொழுந்து என பல நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றை நாம் ஏற்கவில்லை.

ஜனாதிபதி நுவரெலியாவுக்கு நேற்று வந்து, தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்படும் எனக் கூறியுள்ளார். ஜனாதிபதிக்கு நன்றி. ஜே.வி.பியினரின் தொழிற்சங்க உறுப்பினர்கள் 2,000 சம்பளம் வேண்டும் என அன்று கூறினார்கள். எனவே, அந்த தொகையை பெற்றுக்கொடுத்தால் நாம் முழு ஆதரவையும் வழங்குவோம்.

நுவரெலியா மாவட்டத்தில் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய பிரதிநிதிகளையே மக்கள் தெரிவுசெய்ய வேண்டும். கடந்தகாலங்களில் நுவரெலியா மாவட்டத்தில் நாமே அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

கல்வி புரட்சிமூலமே நாம் இலகுவில் சமூக மாற்றத்தை முன்னோக்கி செல்ல முடியும். அதனால்தான் கல்வித்துறைக்கும், பாடசாலைக்கும் கூடுதல் நிதிகளை ஒதுக்கி, அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தோம். எமது சமூகத்தின் வளர்ச்சி கல்வியில்தான் தங்கியுள்ளது. எனவே கல்வியில் நம்மவர்கள் உயர்ந்தால் நிச்சயம் சமூக மாற்றமும் வரும்.

நுவரெலியா மாவட்டத்தில் பல சுயேச்சைக்குழுக்கள் வந்துள்ளன. இதனால் வாக்குகள் சிதறக்கூடும். தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு சிக்கல் வரலாம். எனவே, மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.'- என்றார் மருதபாண்டி ராமேஸ்வரன்.

# திருமலையில் நீர் வெட்டு

(ஹஸ்பர் ஏ.எச்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திருகோணமலை கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அவசர திருத்த வேலை காரணமாக எதிர்வரும் 07.11.2024 ந் திகதி அன்று காலை 6.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணிவரை குடி நீர் விநியோகத் துண்டிப்பு இடம் பெறவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் எல்.சுபாகரன் தெரிவித்தார்.

குறித்த நீர் வெட்டானது திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், தம்பலகாமம்,கிண்ணியா, பட்டினமும் சூழலும் ஆகிய பிரதேச செயலகப் பகுதியிலும் குச்சவெளி பிரதேச செயலக பகுதியின் இறக்கக் கண்டி பாலம் வரையான பகுதியிலும் இடம் பெறவுள்ளதாகவும் இதனால் முன்கூட்டியே போதுமான நீரை சேமித்து வைக்குமாறும் மேலும் தெரிவித்தார்.

இதன் மூலம் ஏற்படும் தடங்களுக்கு பாவனையாளர்களுக்கு தங்களது வருத்தத்தையும் தெரிவிக்கின்றனர்.

